2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. அடல் பிஹாரி வாஜ்பாய், இந்திய முன்னாள் பிரதமர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தியாவின் மூத்த அரசியல்வாதியும், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மூன்று முறை இந்திய நாட்டின் பிரதமராகப் பணியாற்றியவரும், சுமார் 50 வருட காலம் பாராளுமன்ற உறுப்பினராக மக்களவையிலும், மாநிலங்களவையிலும் திறம்பட செயலாற்றியவரும், இந்திய அரசின் பத்ம விபூஷண் மற்றும் பாரத ரத்னா போன்ற உயரிய விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவருமான திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் 16-8-2018 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் தன்னுடைய வாழ்வை இந்தியத் திருநாட்டிற்கு அர்ப்பணித்தவர். இலக்கியத்தின்மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். சிறந்த பேச்சாளராகவும், உயர்ந்த ஆட்சியாளராகவும், கடின உழைப்பாளியாகவும் விளங்கியதோடு, அனைவரிடமும் அன்பாகப் பழகும் தன்மையுமுடையவர்.

இப்பெருந்தகையின் மறைவினால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், பாரதிய ஜனதா கட்சியினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) திரு. பீஷ்ம நாராயண் சிங், தமிழக முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாட்டின் ஆளுநராக 15-2-1991 முதல் 30-5-1993 வரை பணியாற்றிய திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் 1-8-2018 அன்று தனது 85-வது வயதில் இயற்கை எய்தியது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பீகார் மாநில அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அமைச்சராகவும், அசாம், மேகாலயா மாநிலங்களிலும் மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டிலும் ஆளுநராக சிறப்புறப் பணியாற்றியவர்.